# "இலங்கைக்கு படை அனுப்பியது இந்தியாசெய்த மாபெரும் தவருகும்" - லெப்.ஜெனரல் திபேந்தர் சிங்

(புதுடில்லி)

இலங்கையில் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளுக்கு இந்தியா இராணுவத்தை அனுப்பியதும் அங்கு விடுதலைப்புலிகளிடமிருந்த ஆயுதங்களைப் பறித்ததும், இந்திய அரசு செய்த மாபெரும் தவறும் அவசரச் செயலுமாகும்.

இவ்வாறு இலங்கையின் டெக்கு-கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படைகளுக்கு கட்டளை பிறப்பிக்கும் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் திபேந்தர் சிங், அண்மையில் இந்தியாவில் வெளியிட்டுள்ள தமது நூல் ஒன்றில் தெரி

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 03 இதழ் 127
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17 — 06 — 1992

## முல்லை — அலம்பிலில்
## இராணுவ அதிகாரி பலி
## மேலும் ஒரு அதிகாரி 'காயம்

(கொழும்பு)

முல்லைத்தீவு அலம்பில் பகுதியில நேற்று முன தினம் விடுதலைப்புலிகள நடத்திய தாக்குதலில் இறந்த படையினரில் ராணுவ உயர் அதிகாரி ஒருவர் இறந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் மற்றுமொரு இராணுவ அதிகாரி படுகாயம் அடைந்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சு)

# வடக்கு-கிழக்கு இணைப்பு யோசனையை
# ஜனாதிபதி பிரேமா நிராகரிப்பு

(கொழும்பு)

**இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு யோசனை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவினல் நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது:**

ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ் அரசியல் கட்சிகள் சமர்ப்பித்த இந்த யோசனையை அவர் நிராகரித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒருபோதும் இணைக்க முடியாது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழ்க்கட்சிக் குழுக்களிடம் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நிலையான ஒருதீர்வு காணப்படுவதற்கு முன்பு, வடக்கு கிழக்கு இணைப்பே முதலில் முக்கிய

(4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மோதலில்
## 4 படையினர் உயிரிழந்தனர்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையில் நேற்று நடைபெற்ற மோதலில் நான்கு படைவீரர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் புலிகளின் முகாம் ஒன்றை சுற்றிவளைக்க முற்பட்டபோதே இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (சு)

## தீவுப்பகுதிக்குள்
## ஊடுருவ முயன்ற புலிகள்
## ராணுவம் கடுஞ்சமர்

(கொழும்பு)

அராலியிலிருந்து தீவுப்பகுதி இராணுவ முன்னணிப் பாதுகாப்பு அரண்களுக்குள் ஊடுருவ முயன்ற விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் நேற்றுமுன் தினமிரவு கடும்மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஊடுருவலை முறியடிக்க படையினர் பலத்த எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதாகவும் படையினருக்கு உதவியாக இராணுவ முகாம்களிலிருந்து ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலி கொப்டரொன்றும் நீண்டநேரம் அராலி கடற்பகுதியைச் சுற்றி வட்டமிட்டு 50 கலிபர் தாக்குதலை நடத்தியது. (ரி- சு-56)

## பீரங்கித் தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மாதகல் கடற்பிராந்தியத்தில் நிலைகொண்டிருக்கும் கடற்படை கப்பலில் இருந்து கரைப்பகுதியை நோக்கி நேற்று நண்பகல் பலத்த பீரங்கி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது, [72]

## புலிகள் பங்களிப்பை
## ஜனதிபதி ஏற்றுள்ளார்

[கொழும்பு]

இனப்பிரச்னை தீர்வில் புலிகளின் பங்களிப்பு இன்றி முழுமையானதொரு தீர்வை காண முடியாதென்பதை ஜனதிபதி ஏற்றுள்ளதுடன் புலிகளின் பங்களிப்பையும் ஆதரித்துள்ளார்.

இத்தகவலை கடந்த வாரம் ஜனதிபதியை சந்தித்த தமிழ் கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்னைக்கு எப்படியும் இவ்வருட இறுதிக்குள் தீர்வு காண்பதெனவும், மாபெரும் தேசிய பிரச்னையை தீர்த்த திருப்தியில், தான் தோற்கடிக்கப்பட்டாலும் வெளியேறத் தயாரென அப்போது ஜனதிபதி தெரிவித்துள்ளாராம். [சி]

## வாந்திபேதி நோயினல்
## 8 குழந்தைகள் பலி

(மன்னர்)

மன்னர் பேசாலை அகதி முகாமில் வாந்திபேதி நோய் தீவிரமாக பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோயினல் இதுவரையும் இம்முகாமிலுள்ள எட்டுக் குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகத்தீவிரமாகப் பரவிவரும் இந்நோயினைக் கட்டுப்படுத்த இதுவரையும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## வெற்றிலைக்கேணி
## தாளையடி கடற்பகுதியில்
## படை நடமாட்டம்

(உடுப்பிட்டி)

வெற்றிலைக்கேணி தாளையடிப்பகுதி கடற்பிராந்தியக் கடற்படையினருக்குச் சொந்தமான பெரியகப்பலுடன் இராணுவத்தினர் பயன்படுத்தும் 4 பாஜ்களும் காணப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழர் கொலை குறித்து
## ஜனதிபதி பிரேமா கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் துரதிஷ்டவசமாக கொல்லப்படுவதாக ஜனதிபதி கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு மிகிந்தலையில் இடம்பெற்ற பொசன் நோன்மதி தினத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மிகிந்த ஜெயந்தி ஆண்டு நிறைவுபெறுவதற்குள் வடக்கு-கிழக்கு பிரச்னை தீர்த்து வைக்கப்படுமெனவும் அவர் கூறினர். (சி)

## தெற்கில் இடம்பெற்ற
## 40,000 படுகொலைகளுக்கு
## கறுப்பு பூனைகளே பொறுப்பு

(கொழும்பு)

தெற்கில் கடந்த மூன்றுவருடங்களில் கொல்லப்பட்ட 40,000க்கும் மேற்பட்டவர்களின் கொலைக்கு யார் பொறுப்பென முன்னள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல கேள்வி எழுப்பியுள்ளார்.

தலைமறைவான நிலையில் கடந்தவாரம் இவர் புதிதாக வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டில் ஆண், பெண், குழந்தை என்ற வேறுபாடின்றி 40 000க்கும் மேற்பட்டோர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இதற்கு 'கறுப்பு பூனை'களே பொறுப்பு.

கறுப்பு பூனைகளுக்கு அரசு 3000 ரூபா சப்பளமும் தங்குமிட போக்குவரத்து, உணவு வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

இக்கொலைகளுக்கு அரசு பொறுப்பு இல்லை என்றல் ஏன் நீதி விசாரணை நடாதத மறுக்கிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## தம்புள்ள பீடாதிபதிக்கு
## கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

தம்புள்ள விகாரை பீடாதிபதி வண. இனமலுவ சுமங்கல தேரருக்கு கொலைப்பயமுறுத்தல் பல விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தம்புள்ளையில் அரசுஹோட்டல் தொகுதி ஒன்றை அமைக்க முனைந்து வருவதை இவர் கடுமையாக எதிர்த்து வருகிறர். இதையடுத்தே இவருக்கு கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை இக் ஹோட்டல் திட்டத்தை எதிர்த்து ஒருலட்சம் பேர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக அநுராதபுர மாவட்ட சுதந்திக கட்சி எம். பி. திரு. ஜனக் மகிந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

## வரி விளம்பரம்

### தேவை

ஆசிரியர்கள், பட்டதாரி, ஆசிரியர்கள், டாக்டர் வர்த்தகர்கள் ஆகியோருக்கு மணப்பெண்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு கே. எம். பிரஹாலதன், C/o K. S முத்துலிங்கம் (Royal), நவாலி தெற்கு, மானிப்பாய் சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி, [சி-6428]

### சுவையகம்

தரமான பாண், பணிஸ், கல்பணிஸ் போன்ற பேக்கரித் தயாரிப்புகள் அனைத்தையும் சாவகச்சேரியில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்: 'சுவையகம்' பிரதான வீதி, (யூனியன் பெற்ரோல் நிலைய அருகாமை) சாவகச்சேரி. (எ-2218)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம். 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)


### நூல்கள்

அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்', கஸ்தூரியின் ஆக்கங்கள்' (கவிதைகள், சிறுகதைகள்) ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். (சி 6414)

### தமிழ்த்தென்றல்

நண்பருடன் சென்று நாலு தெரு சுற்றியதும் கன்னியரைக்கண்டு அவர் பின்னால் ஓடியதும் இன்று ? நின்று போனது. யாதுமூரானின் கவிதைகள் ரூபா 20/- [சி-6425]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் ஆறுமுகம் செல்லையா

(சோதிட விற்பன்னரும் ஓய்வுபெற்ற மலேசிய நில அளவை அதிகாரியும்)

தோற்றம்: 03-01-1906 மறைவு: 18-05-1992

ஆத்ம சாந்திக் கிரியை: 17 06 1992

அன்போடும் பண்போடும் எமை
சீரோடு பராமரித்த - அப்பப்பாவே,
கடைசிக்கடமையை நானே நிறைவேற்ற
எண்ணினேன்
காலன் உமை நானில்லா வேளையில்
கவர்ந்து விட்டானே
வெளியூர் தம்பிமாருடன் உம்சுகம் கூறியே
பாதிவழியில் நான் வீடு திரும்ப
பார்த்திருக்காமல் சிவலோகம்
சென்று விட்டீரே அப்பப்பா

உற்றார், உறவினர், நண்பர்கள், அன்னாரது ஆத்மசாந்திக் கிரியையில் பங்கு கொண்டு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

"சாந்தி வேண்டி பிரார்த்திக்கும்"

பேரன், மருமகள்.

பண்ணாகம், சுழிபுரம். [சி 6429]

## இசைமாலை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

செஞ்சோலைக் குழந்தைகளும், போராளிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி யூலை மாதம் நடைபெறும் என அறியத்தருகின்றோம். நிகழ்ச்சி நடைபெறும் நாட்கள் செய்தித் தாள்கள் மூலமும், புலிகளின் குரல் வானொலி மூலமும் விரைவில் அறியத்தரப்படும். திட்டமிட்டபடி நிகழ்ச்சியை நடத்த முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

செஞ்சோலை நிர்வாகிகள்

(சி-6422)

## சைவ வித்தியாவிருத்திச் சங்க கேள்வி அறிவித்தல்

தகுதிவாய்ந்த நிறுவனங்களிடம்/ ஒப்பந்தகாரர்களிடம் இருந்து சிறுபேழைகள் அலுமாரிகள் (CUP-BOARDS) மரத்தினால் செய்து வழங்குவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகளை சைவவித்தியாவிருத்திச்சங்கம் கோருகின்றது. குறிப்பிட்ட தளபாடங்கள் கிளிசப்பு தவிர்ந்த அரசினால் சிபார்சு செய்யப்பட்ட முதலாம் வகுப்பு மரத்தினால் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும்.

கேள்விப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 300/-ஐயும் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 3000/-ஐயும் அலுவலக நேரத்தில் சைவவித்தியாவிருத்திச்சங்க நிர்வாக பீடத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தையும் விபரக்கோவையையும் 1992-06-20ம் திகதி முதல் 30ம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் படிவங்களை சங்க பொதுமுகாமையாளருக்கு 1992-07-08ம் திகதி நண்பகல் 12மணிக்கு முன்பாக பொறியிடப்பட்ட உறையில் நேரிலோ அல்லது பதிவுக் கடிதமூலமோ சமர்ப்பிக்கப்படவேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை சைவ வித்தியாவிருத்திச்சங்க கேள்விச்சபைக்கு உண்டு.

வே. குகதாஸ்
பொதுமுகாமையாளர்
சைவவித்தியாவிருத்திச்சங்கம்,

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1992-06-11. (எ-2227)

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
# Patrician Institutes

பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

1. TOEFL (Test of English as a Foreign Language)
   ★ Week days and Week end classes — Duration: 3 months
   ★ Commencing: 22-06-92
2. SPOKEN ENGLISH
   ★ Week days and Week end Classes. — Duration: 3 months
   ★ Commencing: 24-06-92
3. CIVIL DRAUGHTSMANSHIP COURSE
   ★ Commencing: 24-06-92 — Duration: 6 months
4. QUANTITY SURVEYING
   (City and Guilds of London Examination)
   ★ Commencing: 24-06-92
5. COMPUTER PROCESSING COURSES
   (I) Computer Programming in BASIC Language and Disk Operating System (MS-DOS)
   (II) Word Processing and MS-DOS (Word Star - 4000)
   ★ Week day Classes — Commencing 24-06-1992
   (III) d BASE III PLUS and MS-DOS
   (IV) LOTUS 1-2-3 and MS-DOS
   ★ Week end Classes — Commencing: 27-06-92

★ Theory and Practicals

மேலதிக விபரங்கட்கு:

பதிவாளர்.
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
இல: 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். [A 2228]

REGISTRAR,
Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road
Jaffna.

உ

## 1 ம் ஆண்டு நினைவஞ்சலி



## இளம்புலி கீதா
### (செல்வி தர்ஷினி திருச்செல்வம்)

தாய் மகிழ்ந்திட: 17-10-1975 தாயகம் மலர்ந்திட: 17-06-1991

திதி: வளர்பிறை சஷ்டி 05-07-1992

இதயக் கோவில் பாசதீபம்
பார்வை நீங்கிப் பறந்து சென்றதே!
உமக்கு எங்கள் அஞ்சலிகள்
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, மற்றும் உறவினர், நண்பர்கள், மகாஜனக் கல்லூரியினர்.

அம்பனை,
தெல்லிப்பழை. [சி 6423]

# யாழ். மாவட்ட பாடசாலைகளின் தமிழ்தினப்போட்டிமுடிவுகள்

(உடுவில்]

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சகல பிரிவுகளுக்குமான தமிழ் தினப் போட்டிகள் மானிப்பாய் இந்துக்கல்லூரி. மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இரண்டு தினங்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் சகல பிரிவிலும் முதலிடம் பெற்றோர் விபரம் வருமாறு:

வாசிப்பு:1 ந. தர்மேந்திரன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி,2 ச மோகன சுண்டுகுளி மகளிர் கல்லூரி.

சொல்வதெழுதல் 1 செ. அகல்யா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, 2 வி. கவிதா சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

கட்டுரை:1ம. விக்ரர்சிறில்-நவாலி சென். பீற்றேஸ், ரோ. க. த. க. பா,2 சௌ. கௌசல்யா - நுணுவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தி, 3ஜெ. சஸ்மிதா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, 4 தி. மதிமோஞ - கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி.

கவிதை:1பொ. மகிழ்நங்கை யாழ். இந்து மகளிர் கல்லூரி, 2 க. குமுதினி - சாவகச்சேரி இந்து கல்லூரி,

சிறுகதை; 1 கவிஜிதரன் சேர். வைத்திலிங்கம் ம. வித்தி. 2 வே. சிவராசா - வரணி மகாவித்தியாலயம்.

பேச்சு: 1 இ. நிருஜா - மகாஜன கல்லூரி, 2 நா. யாழினி - யாழ். புனித மரியாள் கல்லூரி. 3 பூ. ஜே. மந்தாகினி - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை, 4 சி. வாசுகி - வட இந்து மகளிர் கல்லூரி.

பாஓதல்: 1 இ. சஷ்டிக்குமரன் - யாழ். புனித ஜோன் பொஸ்கோ, 2 க. தீபன் - மகாஜனக் கல்லூரி, 3 சி. சங்கீதா - யாழ். இந்து மகளிர் கல்லூரி, 4 வி. சாருமதி - இராமநாதன் கல்லூரி.

இசை1(தனி]: யோ. தினேஸ்குமார் - மாணிக்கவாசகர் வித்தி, 2 க. சங்கர் - கோப்பாய் சரவணபவானந்த வித்தி, 3 கு. பிரமிளா - மகாஜன கல்லூரி, 4 கு. நீதிமதி மகாஜனக் கல்லூரி.

இசை (குழு]: 1 யாழ். இந்து மகளிர் ஆரம்பபாடசாலை, 2 நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பா, 3 இந்து மகளிர் கல்லூரி, 4 மகாஜன கல்லூரி,

நடனம்'தனி 1 சி. தேவந்தி கொக்குவில் இ. ஆ. பாடசாலை, 2 செ. கோமளா - யூனியன் கல்லூரி, 3 சி.கவிதா நல்லியடி மகளிர் கல்லூரி, 4 ச. தேவகிதேனுமதி - கொக்குவில் இந்துக் கல்லூரி

நடனம் (குழு)! 1 யாழ். மாணிக்கவாசர் வித்தியாசாலை, 2 வேம்படி மகளிர் கல்லூரி. 3 யாழ் இந்து மகளிர் கல்லூரி, 4 கொக்குவில் இந்துக்கல்லூரி.

நாடகம் திறந்த போட்டி; புராணம் - மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, சமூகம் - கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, இசை நாடகம் மானிப்பாய் மகளிர் கல்லூரி,

நாட்டிய நாடகம்: இராமநாதன் கல்லூரி,

நாட்டுக் கூத்து: இளவாலை மெய்கண்டான் வித்தி,

இயல்-விவாத உரை தழுவியது: யாழ். பரியோவான் கல்லூரி,

இசை - விவாத உரைதழுவியது - வட இந்து மகளிர் கல்லூரி.

பல்லியம்: யாழ். இந்துக் கல்லூரி. [109]

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட சாரணர் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளர்கள் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று 17ம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் இயக்க விசேட கூட்டம் இன்று 17ம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறும்,

0 0

(யாழ்ப்பாணம்]

தேசிய வீடமைப்பு அதிகார சபையினல் வீடமைப்பு நிவாரணம் சம்பந்தமாக வலி-தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

''உணவுத் தேவைகளும், உற்பத்தி இலக்குகளும் என்ற புள்ளி விபர தகவல் கைநூல் வெளியீட்டு விழாவும் ஆய்வரங்கும் இன்று மாலை 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்படும் இத்தகவல் கைநூலின் முதற் பிரதியினை தமிழீழ விடுதலைப்புலிகள் மூத்த உறுப்பினர் இளங்குமரன் பெறவுள்ளார். நூல் அறிமுகவுரையினை திரு. யோ. யோகி நிகழ்த்த, நூல் ஆய்வுரைகளை இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளர் சி. ஜெயரட்ணம், யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரையாளர் க. கந்தையா, யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன், வைத்திய கலாநிதி முருகானந்தம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## 80நோயாளிகளுடன் குமண புறப்பட்டது

[யாழ்ப்பாணம்]

80-க்கும் மேற்பட்ட நோயாளர்களும், அவர்களின் உதவியாளர்களுடனும் குமண கப்பல் நேற்று பருத்தித் துறையிலிருந்து புறப்பட்டது.

கடுமையான நோய்களினல் பீடிக்கப்பட்டவர்களும், எழுந்து இருக்க முடியாதநிலையில உள்ள நோயாளர்களுமே பெரும்பாலும் இம்முறை கொழும்புக்கு அனுப்பப்படுகிறார்கள்.

மேற்படி கப்பலில் 250 க்கும் மேற்பட்ட தபால் பொதிகளும் கொழும்புக்குகொண்டு செல்லப்படுகின்றன. (வீ)

## 116 ஆண்டுகளின் பின் கொழும்பில் பெய்த மழை

(கொரும்பு)

கொழும்பில் அண்மையில் பெய்த மழைபோல் இலங்கையில் எந்தவொரு பகுதியிலும் கடந்த 116 ஆண்டுகளுக்குள் மிகப் பெரிய கனத்த மழை பெய்தது கிடையாது என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

18 மணித்தியாலங்களாக இடைவிடாது இந்த மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1376-ம் ஆண்டு 302.02 மில்லி மீற்றர் மழையும், 1976-ம் ஆண்டு 238.8 மி. மீ. மழையும் பெய்துள்ளது.

ஆனல் தற்பொழுது கொழும்பில் பெய்த மழை 493 7 மி. மீ. என்று கொழும்பு வானிலை அவதான நிலையம் தற்போது உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. [வி]

## பொருளாதார வளர்ச்சி பற்றிய புள்ளிவிபர கைநூல்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெறுவதற்கான வளங்களைத் தமிழீழம் கொண்டுள்ளதா? இங்கு இருக்கும் வளங்களைக்கொண்டு ஒரு உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பினை நாம் கட்டி எழுப்ப முடியுமா? என்ற கேள்விக்கு உணவுத் தேவைகளும் உற்பத்தி இலக்குகளும்'' என்ற புள்ளி விபர தகவல் கைநூல் விடையளிக்கிறது. தமிழீழத்தில் உள்ள வளங்களைக் கொண்டு சுயசார்புப் பொருளாதாரத்தினைக் கட்டி எழுப்ப முடியாது என்று வாதிடுபவர்களுக்கு அம்முயற்சியில் நம்பிக்கை ஊட்டுவதாக இக்கைநூல் அமைந்துள்ளது,

மேலும் வடதமிழீழத்தின் வளங்கள், தேவைகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாம் அடைய வேண்டிய உற்பத்தி இலக்குகள் போன்ற தகவல்களையும் உணவு, வலு, நுகர்வு பற்றிய விஞ்ஞானரீதியான தகவல்களையும் உள்ளடக்கி இக்கைநூல் இன்று வெளிவரவுள்ளது.

## 'இராணுவத் தீர்வை எவரும் ஏற்க மாட்டார்கள்'

[கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு இராணுவத் தீர்வுதான் முடிவென்றால் அதனை தமிழ் மக்களோ உலகமோ ஏற்றுக்கொள்ளாதென திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மீது முழு அளவிலான தாக்குதல் நடத்தப்படுமேயானால் அது பொது மக்களின் உயிரிழப்பையே அதிகரிக்கச் செய்யும். அதன் பின்னர் பேச்சுவார்த்தை மேசையை எந்தவொரு தமிழரும் விரும்பமாட்டார்கள்

அவமானமான ஒரு நிலையிலிருந்து பேச்சுவார்த்தைக்கு போக எந்த ஒரு தமிழரும் துணியமாட்டார்கள். எனவே அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானல் அது இப்போதே உடனடியாகக் காணப்படவேண்டும் என்றார்.

## மரதன் ஓட்டப் போட்டி

[உடுவில்]

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினர் நடாத்தும் 75 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், 20மைல் மரதன் ஓட்டப்போட்டியும் இம்மாதம் 20ம் திகதி நடைபெற உள்ளன. [109]

## புலிகளுக்கு ஆதரவாக செயல்படுவோர் மீது கடும் நடவடிக்கை

[சென்னை]

தமிழகத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக செயற்படுவோருக்குத் தண்டனை வழங்கும் நடவடிக்கையை தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளதாக சென்னையிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்போர் அல்லது அவ்வியக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்போரை எச்சரிக்கை செய்யும் விதத்தில் மிகப்பெரிய விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தால் நடாத்தப்படும் தையல்பயிற்சி நிலையங்களில் போதனசிரியர்/போதனசிரியை (ஒப்பந்த அடிப்படையில்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான முடிவு திகதி இம்மாதம் 22ம் திகதியாகும். மேலதிக விபரங்களை 21-05-92 வர்த்தமானியில் பார்வையிடலாம். [சி]

## உலர் உணவு விநியோகம

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப் பகுதியில் வாழும் 308 குடும்பங்களுக்கு இலவச உலர் உணர்வு விநியோகத்திற்கான 'இ' அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

கொட்டடிப் பகுதி மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக அகதிகளாக உள்ளதாக யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா செய்த சிபார்சுக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. [எஸ்)

## இராசி பலன்

17-06-1992

புதன்கிழமை

(தமிழுக்கு ஆனி 03)

துதியை பி. ப. 1-14 வரை, பூராடம் பி. ப. 1-28 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் காலை 11-53 முதல் 1-23வரை, சுபநேரம் மாலை 4-23 முதல் 5-53 வரை.

மேடம்; காரிய இடையூறு, வீணசை, புத்திநசலம்.

இடபம்: மித்திரர் கிலேசம், தனவிரயம், பயம்.

மிதுனம்: தர்மசிந்தனை, மனதைரியம், கௌரவம்.

கடகம்: புத்திரர் நன்மை, குடும்பசுகம், பணவரவு.

சிங்கம்: சத்துருபீடை, இனசனப் பகை, அலைச்சல்.

கன்னி: தொந்தரவு, வயிற்றில் ரோகம், களைப்பு.

துலாம்: தொழில் சிறப்பு, இனியவார்த்தை, பயணம்.

விருச்சிகம்: காரியதாமதம், பெரியோர்பகை, வாக்குக் கலகம்.

தனுசு: அதிகயோசனை, தகாதசெயல், தனிமைப் படல்.

மகரம்: கருத்துமோதல், அநாவசிய தலையீடு, கடன்.

கும்பம்: மனைவியால் பெருமை, விருந்து.

மீனம்: விரக்தி நிலை, தொழில் மேன்மை, சுபகாரியம்.

—ஜோஸ்யர்

தொலைக்கல்வி

## பயிற்சி ஆரம்பவிழா

(நாவற்குழி)

தொலைக்கல்விமூலம் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான ஆரம்ப விழா அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பமானது.

யாழ். மாவட்டத் தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தலைமையில் நடைபெற்ற உடற்கல்விப் பயிற்சி நெறி ஆரம்ப விழாவில் யாழ். மாவட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

கோப்பாய் கொத்தணி அதிபர் த. முத்துக்குமாரசாமி, யாழ் இந்து அதிபர் திரு. பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்கள். (107)

## குழாய்க்கிணறு அமைக்க ஏற்பாடு

[கொழும்புத்துறை]

யாழ் மாநகர சபைப்பகுதியில் குடிநீர்ப் பிரச்னையைப் போக்கும் முகமாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் யாழ் மாநகர சபை இத்திட்டத்தைசெயற்படுத்தவுள்ளது.

யாழ் இராசாவின் தோட்டம், கொழும்புத்துறை எழிலூர் ஆகிய பகுதிகளில் குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## விமான சேவை ரத்து

[(புதுடில்வி)

இந்தியன் ஏயர்லைன்ஸ் விமான சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டதால் நேற்று கொழும்பு-இந்திய விமான பயணம் ஏதும் நடைபெறவில்லை.

இந்தியாவில் நேற்று நடைபெற்ற வேலைநிறுத்தத்தில் விமான ஊழியர்களும் ஈடுபட்டதால் இந்த விமானசேவை ரத்தானது. (சி)

## "கப்பல் மூலம் ஆயுர்வேத மருந்துகளை பெற்றுத்தரவேண்டும்"

(பண்டத்தரிப்பு)

வடபகுதியிலுள்ள சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் ஆயுர்வேத மருந்துவகைகளை பெறமுடியாது மிகவும் அவதிப்படுகின்றனர். ஆகவே ஆங்கில மருந்துவகைகளை இங்கு கொண்டுவந்து விநியோகிப்பதுபோல ஆயுர்வேத மருந்துகளையும் இங்கு கப்பல் மூலம் கொண்டு வந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்''

இவ்வாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரதேச பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் வட இலங்கை சித்த ஆயுர்வேத் வைத்தியர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் டாக்டர் சுகந்தன் இன்னசித்தம்பி கேட்டுள்ளார்.

எமது பகுதியில் 75 வீதமான பொது மக்கள் சித்த ஆயுர்வேத வைத்தியர்களை சிகிச்சைபெறுவதற்காக நாடி வருவதாகவும், இந்த மருந்துகளை இங்கு தயாரிப்பதற்கான மூலிகைகளை பெறுவதற்கு ராணுவ நடவடிக்கைகளினுல் பல சிரமங்களை வைத்தியர்கள் எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் அவர் தமது மகஜரில் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

# இந்தியாவில் வேலைநிறுத்தம்

# 1500 பேர் தமிழகத்தில் கைது

(சென்னை)

இந்தியாவில் நேற்று நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தினுல் தமிழ்நாட்டில 1500க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தியாவில் உள்ள வங்கிகள், பொது நிறுவனங்கள், துறைமுகங்கள், போக்குவரத்துக்கள், இந்த வேலைநிறுத்தத்தினுல் பெரிதும் பாதிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி வேலைநிறுத்தம் சம்பந்தமாக தமிழ்நாட்டில் 25ஆயிரம் பேர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டிருந்த போதிலும் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் இந்த வேலைநிறுத்தம் முழு வெற்றி அளித்துள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் வாகனங்களுக்குத் தீவைக்க முற்பட்டோர், கல்வீச்சுக்களில் ஈடுபட்டோர், வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை தடுக்க முற்பட்டோரே தாம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வி)

## சர்வோதய இணைப்பாளர் பணத்துடன் தலைமறைவு

(வவுனியா)

வவுனியா மாவட்டச் சர்வோதயம் இணைப்பாளர் 5½ லட்சம் ரூபாயுடன் தலைமறைவாகிவிட்டதாக வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவருடன் மேலும் நால்வர் தலைமறைவாகியுள்ளதாகவும், இவர்களைப் பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிற.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்டக் கணக்காளர் கைதுசெய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். (சி)

## வங்கி வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளில் உள்ள வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படவுள்ளன.

1990-ம் ஆண்டு வங்கி நடாத்திய பரீட்சையில் சித்தியடைந்தவர்களே மேற்படி வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட இருப்பதாகவும் இப்பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை வேலை கிடைக்காமல் இருப்பவர்கள், உடனடியாக யாழ். அரச அதிபர் திரு.கா. மணிக்கவாசகரை சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை வங்கியில் 40 வெற்றிடங்களும், மக்கள் வங்கியில் 20 இடங்களும் நீண்ட காலமாக நிரப்படப்படாமல் இருப்பதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

## ராம்தாஸை விடுவிக்குமாறு கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு ராம்தாஸையும், தொண்டர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு தி. மு. க. தலைவர் திரு. மு கருணாநிதி தமிழக அரசைக் கோரியுள்ளார்.

'தூக்குக் கயிறு' போராட்டம் நடத்திய திரு ராம்தாஸும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் நேற்று முன்தினம் திண்டிவனத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

விவசாயிகளுக்கான மின் கட்டணம் உயர்வு குறித்து இப்போராட்டம் நடத்திய ராம்தாஸ, 15நாட்களுக்குக் காவலில் வைக்குமாறு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. (கி)

## யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு எரிபொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த சில வாரங்களாக நிலவிவந்த எரிபொருள் தட்டுப்பாடு தற்போது ஓரளவு நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலை சென்று திரும்பி வந்த குமண கப்பலில் மேற்படி வைத்தியசாலைக்கு தேவையான டீசலும், மருந்து வகைகளும் கொண்டுவரப்பட்டுள்ளது. (வி-56)

## பாகிஸ்தானில் கொலை முயற்சியிலிருந்து இந்திய அதிகாரி தப்பினர்

(புதுடில்லி)

பாகிஸ்தானின் தலைநகரான கராச்சியில் நேற்று இந்தியாஸ்தானிகர் காரியாலயத்தின் உயர் அதிகாரியான ஸ்ரீவஸ்தவா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியிலிருந்து அவர் தப்பிக்கொண்டார்.

கடந்த ஒரு மாத காலத்துக்குள், திரு. ஸ்ரீவஸ்தவா மீது மேற்கொள்ளப்பட்ட 2வது கொலை முயற்சி இது எனக் கூறப்படுகிறது. மேற்படி சம்பவம் பற்றி, இந்தியா பாகிஸ்தானிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. [வி]

## பொலநறுவையில் நால்வர் கைது

(கொழும்பு)

ஆயுதங்களை விற்க முயன்றதாக பொலநறுவையில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இவர்கள் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வெற்றிலைக்கேணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாமென்ற அச்சத்தினுல் இக்கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்புத்தேடி இடம்பெயர்வதாகவும் தெரிய வருகிறது.

இந் நடவடிக்கையையடுத்து இப்பகுதி மக்களிடையே பெரும் அச்சநிலையும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை இராணுவ நடமாட்டமும் காணப்படுகிறது. (150)

## பரீட்சை நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

வினுத்தாள்கள் கொழும்பிலிருந்து வந்து சேராதபடியால் நேற்று யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் டிப்ளோமா பாடத்துக்கான பரீட்சைகள் நடைபெறவில்லை.

இதற்கு முன் ஒரு வினுத்தாள்த் தொகுதி கொழும்பில் இருந்து ஒருநாள் கழித்து வந்து அடுத்த நாள் பரீட்சை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## அந்தோனியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய திருவிழா செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில இம்மாதம் 22-ம் திகதி கொண்டாடப்படும்.

21-ம் திகதி மாலை 6 00 மணிக்கு திருப்பலியும் நற்கருணை வழிபாடும் 22-ம் திகதி காலை 7-00 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும். [வி]

## இந்திய அதிகாரிகளுக்கு விசா வழங்க மறுப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக கொழும்பு வரவிருந்த இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு விசா வழங்க சிறிலங்கா அரசு மறுத்துள்ளதாக இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசா அனுமதியை சிறிலங்கா அரசு விரைவில் வழங்குமென்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

ராஜீவ் கொலை சந்தேகநபர்கள் தொடர்பாக சிறிலங்கா அரசு ஆதரவுப் பத்திரிகைகளில் [illegible] மறுப்பு தெரிவிக்கப்பட்டது குறித்தும் இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது. (சு)

## பண்டத்தரிப்பு ஆலயங்களில் 5239 பேர் தஞ்சம்

(பண்டத்தரிப்பு)

வலி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயம், செபமாலை மாதா ஆலயம், புனித பத்திமாதா ஆலயம் ஆகிய இடங்களில் மொத்தம் 5236 பேர் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளார்கள் இதேவேளை இப்பகுதியிலுள்ள வீடுகளிலும் உறவினர்களுடன் பலர் தங்கியுள்ளார்கள். யாழ். செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கிளை புனித பத்திமாதா ஆலயத்திற்கு முன்பாகவுள்ள கட்டிடத்தில அலுவலகத்தை நிறுவி முதலுதவிச் சிகிச்சை மற்றும் உணவுப்பொருட்களை வழங்குதல் ஆகிய பணிகளைச் செய்துவருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அகதிகளுக்கு அரிசி, மா போன்றஉணவுப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றது. யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவு அகதிகளுக்கு வைத்திய சிகிச்சைகளை வழங்கி வருகின்றது.

இதேவேளை புனித பத்திமாதா ஆலயத்திலும் அதன் சுற்றுப் புறத்திலும் பெருந்தொகையான மக்கள் மிக நெருக்கடியில் தங்கியிருப்பதால் மலசலகூடவசதி, குடிதண்ணீர் வசதி என்பன மிகவும் பற்றுக்குறையாக இருக்கிறது. (72)

## இலங்கைக்கு படை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்துள்ளார்.

தமிழீழம், இலங்கைத்தமிழ் மக்களுக்கு மிக அவசியமானது தமிழருக்கும்-சிங்களவருக்கும் அங்கு நிலப்போராட்டம் நடைபெற்று வருகின்றது. தமிழ் மக்களின் பாரம்பரிய இடங்களில் சிங்களஅரசு திட்டமிட்ட குடியேற்றங்களை நடாத்தி வருவதனுலேயே விடுதலைப்புலிகள் அதை திரத்துடனும், வீரத்துடனும் எதிர்த்து போராடி வருகின்றுர்கள் என்றும் அவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி நூலில் இந்திய இராணுவத்தில் தற்போது உயர் பதவியில் இருக்கும் பீல்ட்மார்ஷல் மனேஜ் தமது கருத்தை தெரிவிக்கையில் இலக்கற்ற ஒரு போராட்டத்தை இந்தியப் படை இலங்கையில் நடாத்தியதினுலேயே விடுதலைப்புலிகளிடம இந்தியப்படை படுதோல்வியடைந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பராதுருப்புகளுக்கு இலங்கையில் தளபதியாகக் கடமையாற்றிய மேஜர் அர்சுன்கடோச்சும் இந்த நூலில் தமது கருத்தை தெரிவிக்கையில்:

நேருக்குநேர் நின்று போராடிய இந்திய இராணுவ வீரர்களுக்குத்தான் தெரியும் விடுதலைப் புலிப் போராளிகளின் போர்த் திறன் பற்றி. தங்கள் மண்ணைக் காப்பாற்றுவதற்காக, கொள்கை-குறிக்கோளுடன் விடுதலைப்புலிப் போராளிகள் தமது உயிரைத் தியாகம் செய்து வருகின்றுர்கள்.

விடுதலைப் புலிகள் இலங்கை அரசு கூறுவதுபோல் இராட்சசர்கள் அல்லர். அப்படி இருந்தால், ஆற்று வெள்ளம் போல், இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து தமது உயிரை அர்ப்பணிக்கமாட்டார்கள்.

'நீங்கள் ஒருசமயம் இந்தியாவுக்குப் போய்விடுவீர்கள். கடைசிவரை எங்களையும், எங்கள் மண்ணையும் சிங்கள அரசிடமிருந்து காப்பாற்றப் போவது விடுதலைப் புலிகள் தான் என, என்னிடம் பல தமிழ்க் கிராமவாசிகள் கூறியுள்ளனர்'' என்று குறிப்பிட்டுள்ளார்' (வி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மென, தமிழ்க்கட்சிக் குழுக்களின் பிரதிநிதிகள் ஜனுதிபதிக்கு எடுத்துக்கூறியபோது அவர் அதை முற்ருக நிராகரித்து விட்டதுடன், ஆளும் ஐ. தே கட்சியின் தேர்தல் அறிக்கையில், வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி என்ன கூறப்பட்டுள்ளதோ அதே நிலையைத்தான் நாம் இப்போதும் கடைப்பிடித்து வருகின்றேம், என்று ஜனுதிபதி அவர்களிடம் கூறியதாக, செய்திகள் தெரிவிக்கின்றன. [வி]

## அராலியை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்

[வட்டுக்கோட்டை]

காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு ஆகிய இடங்களிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10-15 மணியளவில், ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் அராலி, வட்டுக்கோட்டைப் பகுதியை நோக்கிச் சரமாரியான ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு 7-00 மணியளவில் பல தடவைகள் பரா வெளிச்சம் பரப்பி, இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலிகொப்டர் ஒன்று இப்பகுதியைச் சுற்றி வட்டமிட்டு நீண்ட நேரம் சுட்டுக்கொண்டிருந்தது.

ஷெல், பீரங்கிக் குண்டுகள் அராலி தெற்கு, அராலி மேற்குக் கரையோரப் பகுதிகளில் விழுந்து பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறின.

இத்தாக்குதல்களால் பீதி அடைந்த அராலிப் பகுதி மக்களில் பெரும்பாலானேர் இடம்பெயர்ந்தனர். (139-56)

## சனசமூக நிலையம்

(கொழும்புத்துறை)

மாவீரர் வெற்றியின் நினைவாக சுழிபுரம் வறுத்தோலைக் கிராமத்தில் சனசமூக நிலையமொன்று அண்மையில் மாவீரர் வெற்றியின் தாயாரினுல் விடுதலைப் புலிகளுடன்திறந்துவைக்கப்பட்டது.

## நாடாளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்னை தீர்விற்கு பொதுக்கருத்தை உருவாக்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒரு பொதுக்கருத்தை உருவாக்குமென அரசாங்கம் காத்திருப்பதாக ஜனுதிபதி அலுவலகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் அமைச்சர் தொண்டமானேடு எட்டுக் கட்சிகள் ஜனுதிபதியை சந்தித்த பின்பே மேற்கண்ட அறிக்கை ஜனுதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (சு)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the Genera Post office Srt Lanka under Licence Nnmber B/10336/86